அசல்

✓ 3.2.17 ஸ்ரீநிவாஸன்

அசல் - 1 நகல் - 1

[illegible]

உ

சிவமயம்

திருவை
3.2.17

அகஸ்திய முனிவர் அவதாரமாயெழுந்தருளியிருக்-
கும் ஸ்ரீமத். ஐயரவர்கள் பொற்பாதகமலங்களில்
அடியேன் ஸ்ரீநிவாஸன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து
விஞ்ஞாபனம்.

க்ஷேமம். எனக்கு இப்பொழுது
ஜ்வரமில்லை - துர்ப்பலம் அதிகமாகவிருக்கிறது -.
சீக்கிரம் அதுவும் நீங்கிவிடுமென்று நம்புகிறேன்.
தங்களுடைய தேக சௌக்கியத்தைப் பற்றியடிக்கடி
விவரமாய்க் கேட்கப்பிரியப்படுகிறேன்.

பொருளதிகாரத்துக்கு இளம்பூரண
ரடிகள் உரையொன்றிருக்கிறதாமே? எனக்கு அது
அவசியம் வேண்டியதிருக்கிறது - தமிழர் பூர்வசரித்-
திரம் எழுதுவதற்கு அதொன்றியமையாதது - பொரு
ளதிகாரம் அச்சிடுவது கனவிலும் என்னுடைய
உத்தேசமல்ல. தங்களிடமிருந்தால் நான்.
ஒரு கொபி செய்து கொள்ள அனுமதியைப் ப்ரார்த்திக்-
கிறேன்.

வரவர நச்சினார்க்கினியரிடத்தில் பக்தி
பெருகிக் கொண்டு வருகிறது - அவர் இலக்கண விலக்-
கியங்களில் அதிகத்தேர்ச்சியுடையவர். அநேகத்
தேர்ச்சியவர்க்கு கோபத்தையுண்டு பண்ணினும்
பேணுவாரெல்லாம், யார் நம்மை யெதிர்ப்பவரோ,
எனக் கொண்டு பூர்வாசாரங்களைத் தள்ளுவதான
வேட்கையை பொய்க்கதைகளை யுண்மையென

அசல்

✓ 3.2.17 பரிசீலனை

அசல் - 1 நகல் - 1

2

உலகத்தார் கொண்டாடும்படி வெளிப்படச் செய்தது.
ஆனால் வெளிப்படையே பொய்க்கதைகளை யதார்த்தமாக
ஐக்கியங்களை இணைத்துப் பொய்யென்று கொள்ளவும்
பழங்கதைப் பிரதாபங்களை மெச்சவும் நினைப்பது
சமர்த்தர் - பிராமணரல்லர் - இளம்பூரண
அடிகள் - பேராசிரியர் - இவர்கள் இவரையொத்த
சமர்த்தர்களோ அல்லவோ - பிராமணர்கள் - நாலகோ
இப்பொழுது எழுதுவோன் நல்ல மாயோர்கள் என்பது
தெரியும். ஆயினும் அப்படிப்பட்ட காலம்
இன்று இல்லை என்பது எனது நம்பிக்கை.

திருவிளையாடற் புராணம் நல்ல
செய்யுட்கோன் - பிராமணனில்லை.

ஸங்கப்புலவர்களில் பௌத்தர்
இத்தனை - ஜைனர் இத்தனை - சைவர் வைஷ்ணவர்கள்
இத்தனை பேரென்று கண்டுபிடிக்க முடியுமா? பிராமணர்,
க்ஷத்திரிய வர்ண பேதங்களைக் கண்டுபிடிக்க முடியு
மா? நக்கீரனையாவது வேளாளர் ஸூத்திரரென
நினைத்திருந்தேன் - பிராமணர் போல் தோன்று
கிறது. ஸரஸ்வதி மஹாலில் அவரால் செய்யப்
பட்ட ஒரு ஸம்ஸ்கிருத நிகண்டு இருக்கின்-
கிறது. காளஹஸ்தியப்பன் ஸ்தோத்திரத்துடன்
ஆரம்பிக்கிறது.

ஸோமதேவப் பட்டன் என்னும் வட
மொழிப் பண்டிதன். கி.பி. 11-ம் நூற்றாண்டில்
தொகுத்த கதாஸரித்ஸாகர மென்னும் புஸ்தகத்தில்

அசல்

✓ 3.2.17 ஸ்ரீநிவாசன்

அசல் - 1 நகல் - 1



ஐந்திர வியாகரணம் பிரசாரத்திலிருந்த பாணினி காலத்தில் சிவபிரான் சாபத்தால் நஷ்டமாய்ப் போய்விட்டதென்று எழுதியிருக்கிறேன். இதற்கேற்றாற்போலத்தான் இக்காலத்தில் உள்ளார் பலரும் கூட யுக்தியுக்தமாகச் சொல்லுகிறார்கள். இக்கதை மெய்யுண்மையென்று கொண்டால் ஐந்திரமென்பது வியாகரண மதப்பாதைகளில் ஒன்றான் சாஸ்திரமாயிருந்து வேறு வியாகரண மதஸ்தாபனம் பாணினி செய்திருந்த வியாகரணத்திற்கு முன்னுற்றே நஷ்டமாய்ப் போய்விட்டதென்றதும். சிலர் யதி-காலத்தில் சுவணபெயர்களைப் பற்றிச் சொல்லியிருந்து விளைதியமும் பல கேள்விகளுக்கிடமுண்டாகும். திருவாசகத் தேவாரம் அதிகத்தில் கண்டது உண்மைதானென்றுமும் ஐயமுளது. "இந்திரத்தையாளிதாக வித்தார் போலும்" என்பது தேவாரம். இதற்கேள்வியொன்றுமுண்டு ஐந்திரம் = வியாகரணம், ஐந்திர வியாகரணம் என்று பலரால் சொல்லப்படும் வியாகரண மதங்களில் நூலக்கில் ஒன்று ~~[illegible]~~ பல-சில மதங்களையும் தனக்குள்ளடக்கிக் கொண்டிருந்தது. அதற்கு நியாயம்-கீழ்கண்ட ஒரு வியாசம் எழுதியிருக்கிறேன்.

ஐரோப்பா சண்டையால் நமது நாடு திண்-டாட்டம் நிலைத்துக்கொண்டிருக்கிறது. ஈசன் செயலைப் பார்த்தீரோ?

அடியேன்
ஸ்ரீநிவாசன்

நகல்

2

சிவமயம்.

தஞ்சை,
3-2-17.

அகஸ்திய முனிவர் அவதாரமாய் எழுந்தருளியிருக்கும் கனம் ஐயரவர்கள் பொற்பாத கமலங்களில் அடியேன் ஸ்ரீநிவாஸன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து விக்ஞாபனம்.

க்ஷேமம். எனக்கு இப்பொழுது ஜ்வரமில்லை. துர்ப்பலம் அதிகமாகவிருக்கிறது. சீக்கிரம் அதுவும் நீங்கிவிடுமென்று நம்புகிறேன். தங்களுடைய தேக சௌக்கியத்தைப்பற்றியடிக்கடி விவரமாய்க் கேட்கப் பிரியப்படுகிறேன்.

பொருளதிகாரத்துக்கு இளம்பூரணவடிகள் உரையொன்றிருக்கிறதாமே? எனக்கு அது அவசியம் வேண்டியதிருக்கிறது - தமிழர் பூர்வ சரித்திரம் எழுதுவதற்கு அது இன்றியமையாதது. பொருளதிகாரம் அச்சிடுவது கனவிலும் என்னுடைய உத்தேசமல்ல. தங்கள் இடமிருந்தால் நான் ஒருகாபி செய்து கொள்ள அநுமதியைப் பிரார்த்திக்கிறேன்.

வரவர நச்சினார்க்கினியரிடத்தில் பக்தி போய்க் கொண்டு வருகிறது. அவர் இலக்கண லக்கியங்களில் அதிகத் தேர்ச்சியுடையவர். அந்தத் தேர்ச்சியவருக்குக் கர்வத்தை யுண்டுபண்ணி மனம் போன வாறெல்லாம் யார் நம்மை யெதிர்ப்பவருளர் எனக் கொண்டு பூர்வாதாரங்களுக்கு விரோதமான வேடிக்கைப் பொய்க்கதைகளை யுண்மையென உலகத்தார் கொள்ளும்படியெழுதச் செய்தது. தன்னால் வெளியிடப்பட்ட பொய்க்கதைகளை ஸ்தாபிக்க வாக்கியங்களைச் சிதைத்துப் பொருள் கொள்ளவும் பதங்களுக்குப் புது அர்த்தம் எழுதவும் நேரிட்டது.

சமர்த்தர் - ப்ராமாணிகரல்ல - இளம்பூரண வடிகள் - பேராசிரியர் - இவர்கள் இவரையொத்த சமர்த்தர்களோ அல்லவோ - ப்ராமாணிகர்கள் - தாங்கள் இப்பொழுது என்னுடன் ஒவ்வமாட்டீர்கள் என்பது தெரியும். ஆயினும் அப்படிப் பட்டகாலம் ஒன்று வருமென்பது எனது நம்பிக்கை

நகல்

களவாய ஜுரைக்காரனும் நல்ல கெட்டிக்
காரன் – பிராமணிகனல்ல.

சங்கப்புலவர்களில் பௌத்தரித்தனை,
ஜைனரித்தனை, சைவர், வைஷ்ணவர்களித்தனை
இத்தனை யென்று கண்டு பிடிக்க முடியுமா? பிராமணர்
முதலாய வர்ண பேதங்களைக் கண்டுபிடிக்கமு
டியுமா? நக்கீரரை யாதுவரையால் ஆத்திரரை
நினைத்திருந்தேன் – பிராமணர் போல் தோன்று
கிறது. ஸரஸ்வதி மஹாலால் அவரால் செய்
யப்பட்ட திருந்த ஸம்ஸ்கிருத நிகண்டு ஒன்று இருக்
கிறது. காளஹஸ்தியம்மன் ஸ்தோத்திரத்துடன்
ஆரம்பிக்கிறது.

ஸோம தேவபட்டன் என்னும் வட
மொழிப் பண்டிதன் ஒருவன் கி.பி. 11-ம் நூற்
ண்டில் தாரனை யெழுதிய கதா ஸரித் ஸாகரமென்
னும் புத்தகத்தில் ஐந்திர வ்யாகரணம் பிர
சாரத்திலிருந்து பாணினி காலத்தில் சம்புவி
ன் சாபத்தால் நஷ்டமாய்ப் போய் விட்டதென்
று எழுதியிருக்கிறான். இந்தக் கதையைத்
தான் இக்காலத்திலுள்ளோர் பலரும் கூட்டி
யுங் குறைத்துஞ் சொல்லுகிறார்கள். இக்
கதையை யுண்மையெனக் கொண்டால்
ஐந்திர மென்பது வையாகரண மதங்க
ளில் ஒன்றான் ஸாஸ்திரமாயிருந்து வேறு
வையாகரண மதத் தலைவரான பாணினி செய்த
சிறந்த வ்யாகரணத்திற்கு முன்னாற்றாது ந
ஷ்டமாய்ப் போய் விட்டதென்றும் சிலப்பதி
காரத்தில் சாவணைப் பெயரைப் பற்றிச் சொல்
லியிருப்பது ஹாஸ்யமாய்ப் பல சொல்லுக்
கிடமுண்டாகும். திருவாரூர்த் தேவாரப்பதி
கத்தில் கண்டது உண்மைதானோ வென்னும்
ஐயமெழும். "இந்திரத்தை யாணிதாக வோர்ந்
தார் போலும்" என்பது தேவாரம். இந்த்ரமே
ஐந்திரம் – வ்யாகரணம்.
ஐந்திர வ்யாகரணமென்று பலரால் கொள்ளப்படு
ம் வையாகரண மதங்களின் ஒன்றல்ல –
சகல மதங்களையும் தனக்குள் அடக்கிக்கொ
ண்டிருப்பது. அதற்கு நியாயங்களுடன் ஒரு
வியாசமெழுதியிருக்கிறேன். ஐரோப்பா சண்
டையால் ந... நாட் தினந்தோறும் நீங்கிவந்து
வருகிறது. ... செய்வேன் ப...யோ?

அடியேன்,
ஸ்ரீநிவாஸன்.

நகல்

4.

(1)

(18)

தஞ்சை. ஸ்ரீனிவாசராவ்
3-2-17.

Copied.
ந.3. vol iv.
p-170-174.

(31)

19